# தென்னகம்

ஆசிரியர்: K.A. மதியழகன்

மலர் - 1 | 11 - 12 - 59 வெள்ளி | இதழ் - 47


# அமைதியின் அரண்! ஆக்ரமிப்பின் வைரி!

“ நான் ஒரு போர் வீரன். போர்க்-கோலத்தால் ஏற்படும் துயர நிகழ்ச்சிகளை மற்றவர்களை விடத் தெளிவாக உணர்வேன். மனிதத்தன்மை பட்டொழிந்து விடுகிறது. இரக்கம் என்ற உணர்வு தலை காட்டுவதேயில்லை. முட்டாள் தனம் அங்கு முடி மன்னன். இந்தக் கொடுமையை, அருவருக்கத்தக்க நிலைமையை என் சொந்த அநுபவத்தில் உணர்ந்ததாலேயே யுத்தத்தை நான் கடுமையாக வெறுக்கிறேன் ” — 1951-ம் ஆண்டு பிரான்சு நாட்டில் பேசும்போது அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவர் குறிப்பிட்ட அநுபவ மொழிகள் தான் இவை. அவரின் இதயத்தில் உலக சமாதானத்தின் மீதுள்ள ஆழ்ந்த விருப்பத்தை இந்த உண்மைகள் பிரதி பலிக்கின்றன.

1953-ம் ஆண்டு அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொறுப்புள்ள ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் வரை அரசியல் காரியங்களில் ஈடுபடவேயில்லை. அவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில் அவருக்கு அடித்தளமாக காணப்பட்டது ராணுவப்புகழே தவிர, அரசியல் செல்வாக்கு அல்ல. செனட்டராகவோ, கவர்னராகவோ அல்லது அரசாங்கத் துறையில் வேறு பொறுப்புக்களையோ இவர் ஜனாதிபதி பதவி ஏற்கும்வரை வகித்ததில்லை. இதுதான் உலகமக்களை இவரின் செயல்களை கூர்ந்து நோக்கத் தூண்டுகிறது. அன்றைய சூழ்நிலையில் ஐசன்ஹோவரின் தலைமைதான் நாட்டுக்குத் துணைபுரியும் என்று கருதினார். தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். தென் கிழக்கு ஆசியாவின், கொரியாப் பகுதியில் எங்கும் போர் மேகங்கள் கப்பியிருந்த நேரம் அது. இவரின் நடவடிக்கையினால் தான் அமெரிக்க நாடு தன் நீண்ட நா[illegible] பெருமை பட்டொழிந்து போகாமல், சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்று நம்பினர்.

கடந்த சில ஆண்டுகளில் போர் எங்கும் மூண்டுவிடுமோ, உலகம் மீண்டும் ரத்தக்களறியாகுமோ என்று எண்ணும் வகையில் உலக அரங்கில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1953-ம் ஆண்டு ஐக் ஜனாதிபதி பொறுப்பினை ஏற்ற ஆரம்ப நாட்கள். கொரியாப் பகுதிகளில் மூண்ட சச்சரவு முடியும்வகையாகக்காணோம். சீனர்களோ சமாதானத்தின் மீது அக்கறை காட்டாதமந்த நிலை. அமெரிக்க சர்க்காரின் மிகப் பொறுப்புவாய்ந்தவர்கள் எல்லாம் சீன நாட்டின் மீது தக்க நடவடிக்கை எடுத்து பாடம் கற்பிக்க வேண்டும் என்று துடித்தனர். தனக்கிருக்கும் தனி அதிகாரத்தினால், அதனைத் தடுத்து நிறுத்தி அன்றைய தினம் போருக்கான நடவடிக்கைகளை தடுத்தார். ஐக்கின் குறுக்கீடு மட்டும் இல்லாதிருந்தால் ஆறு ஆண்டுகட்கு முன்பே அழிவின்நர்த்தனம் அங்குதுவங்கியிருக்கும். பர்மோசாத் தீவினைப் பிடிப்பதற்கு செஞ்சீனம் ஆத்திரத்தைக் கிளறும் வகையில் நடவடிக்கை எடுத்த பல வேளைகளில் கூட, அமைதியோடு இருக்கக் கட்டளையிட்டாரே தவிர, ஆத்திரக்கோலம் பூணவில்லை, தவறை மேலும் ஒரு தவருல் திருத்த முடியாத என்பதை உணர்ந்தவர். தங்களின் பிரச்சனையில் நியாயம் பின்னிக் கிடப்பதினால் நீதி நின்று, என்றும் வெல்லும் என்று காரியங்கள் ஆற்றினர்.

இந்தோசினவின் ஒரு பகுதியினை சீனம் பிடித்தபோது, அந்த நாட்டு சர்க்கார் அமெரிக்காவிடம் உதவி கேட்டது. அன்றையதினம் அமெரிக்காவின் வெளிநாட்டு மந்திரியாகப் பணியாற்றிய ஜான் டல்லஸ் முதலிய பொறுப்பு வாய்ந்தவர்கள் கூட அமெரிக்கத் தலையீடுதேவைஎன்றனர். இந்தோ சீனப் பிரச்சனையில் தலையிடுவது நமக்கு எளிதாக இருக்கலாம். சாத்தியமானதாக கூட இருக்கலாம். ஆனல் அது ஒரு உலகப் போருக்கே துவக்கமாக அமைந்தாலும் அமையலாம் என்று கூறிஅவர்களின் யோசனையை ஐக் ஏற்க்க மறுத்தார்.

கிழக்காசியாவில் இன்றைய தினம் சமாதானத்தின் வெண்புரு அச்சமின்றி வானில்பறக்கிறதென்ருல் இவரின் நடவடிக்கைதான் அதற்குக் காரணம்.

(8-ம் பக்கம் பார்க்க)



# முல்லை மடல்

## புடம்போட்ட தங்கமானேும்!

மகளே !

சென்னை மேயர் தேர்தலில் நானும் எனது சிறியதொண்டை காணிக்கையாக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததால் சென்றவாரம் உனக்கு முடங்கல் தீட்ட முடியவில்லை.

இரண்டாவது முறையாக சென்னை நகராட்சி மன்றத்தின் மதிப்புவாய்ந்தஆசனத்தில் நமது கழகத்தின் கண்மணி, அப்துல் கரதர் அவர்கள்அமரும் வாய்ப்பு பெற்றிருப்பதைகண்டு உன்உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியிருக்கும். அதே நேரத்தில் நமது கழகத் தோழர்கள் பெருவாரியாக உள்ள மன்றத்தில், நமதுதோழர் தலைமை பீடத்தில் அமருவது இயற்கைதானே? என்று இந்த வெற்றியைக் குறித்து சாதாரணமாக நினைத்திருக்கவும்கூடும். நுனிப்புல் மேய்வதைப்போல் அன்ருட அரசியலை கவனிப்போரின் கண்களுக்கு இந்த வெற்றி மிக சாதாரணமாகதான் தெரியும். நமது தோழர்கள் நாற்பத்தைந்துப்பேர், பொதுவுடமை தோழர்களும் அவர்களை சார்ந்தோரும் அறுவர், முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த தோழர் ஒருவர் ஆக ஐம்பத்திரண்டு என்றுகூட கணக்குப் போடுவர். சென்னை மேயர் தேர்தலில் தி. மு. க. பெற்றது ஐம்பத்திரண்டு, காங்கிரஸ் பெற்றது நாற்பத்திமூன்று இடையில் ஒன்பது ஓட்டுகள் வித்தியாசம். போட்டியிடும் தோழர்கள் 'ஓட்' அளிப்பதில்லை. இதை கூர்ந்து ஆராய்ந்தால் நாம் எவ்வளவு சிரமப்பட்டு வெற்றிப் பெற்றிருக்கிறேும் என்பது புலனுகும்.

அது மாத்திரமல்ல, கண்ணே! இந்தமுறை நம்மை முறியடித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு, கனம் காமராஜரும் அவரது தொண்டரடிபொடி ஆழ்வார்களும், முழு மூச்சுடன் பணியாற்றினுர்கள். அது மாத்திரமல்ல, நமது தோழர்களைக் கூட வலைவீசிப் பிடித்துவிடுவோம் என்று சபதமிட்டு செயலாற்றினர். பாவம் அப்பாவிகள் நமது தோழர்கள்கொள்கையில் எஃகுப்போல் உறுதி படைத்தவர்கள் என்பதை அறிந்துக் கொள்ளக்கூட அந்த 'பாரத புத்திரர்களால்' முடியவில்லை. நமது தோழர்களிடையே பிளவு ஏற்படுத்தி, பூசலை வளர்த்து, அந்த நெருப்பிலே குளிர்காயலாம் என்று திட்டமிட்டனர் குள்ளமதிபடைத்தோர். நமதுகழக கண்மணிகள், 'காசு' இல்லாதவர்களாக இருக்கலாம்; ஆனுல் அவர்கள் 'மாசு' இல்லாதவர்கள் என்பதை அவர்கள் உணரும் நல்வாய்ப்பு ஏற்பட்டது இந்த தேர்தலில். அறிஞர் அண்ணு, மேயர் பாராட்டு கூட்டத்தில் குறிப்பிட்டார்கள். "நமது தோழர்களின் ஓட்டு உறவு, பிணைப்பு சாதாரணமானதல்ல; இரத்தத்தால் ஒட்டப்பட்டிருக்கிறது. அதை வெட்ட நினைப்போர் ஏமாளிகள் மட்டுமல்ல; வெட்கப்பட வேண்டியோர் என்று. அதை காங்கிரஸ் கனதனவான்கள் இந்த சந்தர்ப்பத்தில் சிந்தித்துப்பார்க்க வேண்டும்!

பொதுவுடமை தோழர்களுக்கும் நமக்கும் உள்ள உறவை உடைத்தெறியவும் திட்டமிட்டனர். பிறைக்கொடி ஏந்தி, முஸ்லீம் லீக் ஜிந்தாபாத் என முழங்கும் நண்பர் அப்துல் சமத்திற்கும் நமக்கும் உள்ள இன்ப பிணைப்பை பிளக்கவும் திட்டமிட்டனர், அந்தோ பரிதாபம்... தோல்வியை தழுவினர்! அறிஞர் அண்ணுவின் அரசியல் தந்திரத்தின்முன் இந்த தகிடுதத்தக்காரர்களின் செப்படி வித்தை தவிடுபொடியாகியது!

## முல்லை சக்தி

அறிஞர் அண்ணு அவர்கள் மேயர் பாராட்டுக் கூட்டத்தில் கூறினுர்கள் "இந்த முறை மேயர் தேர்தலில் நான் கையாண்ட முறையை விளக்கமாகச் சொல்ல இயலாது. சூசகமாக குறிப்பிடுகிறேன். காங்கிரஸ்காரர்கள் எந்த முறையைக் கையாண்டு இந்தமுறை வெற்றிப் பெறலாம் என்று திட்டமிட்டு பணியாற்றினுர்களோ அதே முறையை நானும் கையாண்டு வெற்றிப்பெற்றேன். ஆகவே 'இதே முறையை' மீண்டும் காங்கிரஸ்காரர்கள் கையாளுவார்களேயானுல், நிச்சயம் தோல்வியைத்தான் தழுவுவர். இந்த முறை அவர்களுக்கும் நல்லதல்ல; நமக்கும் நல்லதல்ல; ஆகவே காங்கிரஸ் நண்பர்கள் இந்த முறையை கையாளுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்" என்று. இதை காமராஜரும் அவரது அடிவருடிகளும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்!

பணத்தை இரைத்தால் பதவி பெறலாம் என்று மனப்பால் குடித்த குபேர புரியார் குப்புற வீழ்ந்தனர். கொள்கை வெறி பிடித்தோர், வெற்றி பெற்றனர். ஆக நமது கட்டுப்பாட்டை துண்டாட நினைத்தவர்கள் தோல்வியை தழுவினர். அது மாத்திரமல்ல, குப்புறவிழுந்து மண்ணை கவ்வினர். திராவிடத்தின் 'தலைவிதி'யை எழுதும் அறிஞர் அண்ணுவின் கரங்களுக்கு முன்னுல், காங்கிரஸ்காரர்களின் சிரம் தாழ்ந்தது. அதுஎத்தகைய வெற்றி என்பதை சிந்துத்துப் பார்! துரோக சிந்தைக் கொண்டோரின் கபட நாடகத்தை முறியடிக்க, நமது அண்ணன் கண் துஞ்சாது — ஊண் கொள்ளாது பம்பரம்போல் சுழன்று பணியாற்றி நமக்குஇந்தவெற்றியைத் தேடித் தந்திருக்கிருர்! அவருக்கு நாம் இந்ததிருவிடம் நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறதல்லவா? நாம் அவருக்கு எந்த முறையில் நமது நன்றியை காணிக்கையாக்குவது அவரின் சொல்வழி நடந்து–அவரின் சுட்டுவிரல் அசைவுக்கு நாம் சுழன்று, பணியாற்றுவதை தவிர வேறு எதை நம்மிடம் இருந்து அவர் எதிர்பார்ப்பார்! கொள்கையிலே் இருந்து வழுவாது கட்சி கட்டுப்பாட்டை மீருது நாம் பணிபுரிவதுதான், நமது தலைவ[illegible]க்கு நாம் செலுத்தும், நன்றியும், [illegible]ணிக்கையும் ஆகும்!

மேயர் பாராட்டுக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் நமது எதிர்கால திட்டத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்கள்! "நமக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் நடுவே ஊசலாடுவது பணம். அதை வைத்துக்கொண்டு காமராஜர் விளையாடுகிருர். வருகிற தேர்தலுக்குள் ஐந்து இலட்சம் ரூபாய் சேர்த்து தருவீர்களேயானுல், உங்கள் அறிவின் மீது ஆணையிட்டு கூறுகிறேன் காமராஜரை 'ஒரு கை' பார்ப்பேன். அதற்கு நீங்கள் இன்றையிலிருந்து முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். தினம், தினம், சிறு சிறு தொகையை உண்டியலில் போட்டு; சேமித்து வைத்து, தேர்தல் காலத்திலே கொடுங்கள். இந்த பணியை இன்றையிலிருந்தே துவக்குங்கள்.' என்று அங்கு கூடியிருந்த இலட்சோப இலட்சம் மக்களுக்கு தனது வேண்டுகோளை நாம் செய்ய வேண்டிய கடமையை–தெரிவித்தார்கள். அந்த பணியில் நாம் இன்றிலிருந்தே ஈடுபட வேண்டும். நமக்கு கிடைக்கின்ற காசில் ஒரு பகுதியை கழகத்துக்காக சேமிக்க வேண்டும். அந்த தொகை நமது தாயகத்தின் அடிமை விலங்கொடிக்க பயன்படும். இன்பதிராவிடம் மலர, உரமாகும். அந்த கைங்கரியத்தைச் செய்ய நீ கூட முன் வர வேண்டும். உன் கைசிலவிற்கு அப்பா அனுப்பும் தொகையில் ஒரு சிறு தொகையை, மிச்சம் பிடித்து, கழகத்திற்குகாணிக்கையாக அளிக்கும் நற்பணியில் உன்னையும் ஈடுபடுத்தி கொள்ள வேண்டும். அப்பா அனுப்பும் தொகை எனக்கே போதுமானதாக இல்லையே' என்று கூறுவாய்! வாரம் தவருமல் நீ படம் பார்க்கிருய் அல்லவா? அதில் ஒரு வாரம் படத்திற்குபோகாமல் அந்த காசை கழகத்திற்காக ஒதுக்கி வை. மாதம் தவருமல் நைலானும், ஜார்ஜெட்டும் எடுக்கிருய் அல்லவா? அதை சிறிது குறைத்து கழகத்திற்கு கொடு! எண்ணற்ருேர் உண்ண உணவின்றி – உடுக்க உடையின்றி – படுக்க இடம்மின்றி அல்லல் படுவதை விரட்டி அடிக்க – நம்மை பெற்றெடுத்த மாதாவின் கால்களில்பூட்டப்பட்டுள்ள அடிமைச் சங்கலியை உடைத் தெரிய இந்த 'தியாகத்தை' நீயும்— உன்னைப்போன்ருேரும் செய்யத்தான் வேண்டும். இந்த தியாகம் தாயகத்தை அன்னியர் பிடியிலிருந்து மீட்க செய்யப் படுவதாகும். அதிலே பெருமை இருக்கிறது; புகழ் இருக்கிறது. அது மாத்திரமல்ல, கடமையும் இருக்கிறது. ஆகவே இந்த தியாகத்தை செப்ய உன்னை தயார் செய்துக் கொள்! நாம் இன்றுச் செய்யும் இந்த சிறு 'தியாகம்' கண்ணீரும் கம்பலையுமாய் காட்சித் தரும் கோடிக்கணக் கானவரின் வாழ்வு மலருவதற்காக! இருளடைந்திருக்கும் இலட்சோப இலட்சம் குடிசைகளிலே ஒளி ஏற்ற! அதை நெஞ்சிலெ நிறுத்திஞல்–நீஇந்த தியாகத்தைச் செய்ய தயங்கமாட்டாய்! தியாகம் செய்ய தவருத குடும்பத்தின் குலக் கொடி நீ. உன் நரம்புகளிலெ, ஆண்டாண்டு காலமாய், பரம்பரை பரம் பரையாய் தியாகம் செய்தோரின் இரத்தம் ஓடுகிறது! ஆகவே நீ இத்தகைய தியாகம் செய்ய தவறமாட்டாய் என்பதை பூர்ணமாக நான் உணர்ந்திருக்கிறேன்; நம்பிக்கையும்இருக்கிறது! கண்ணே! என் ஆசை–நிராசையாக்காமல்காப்பது உன் கடமையாகும்!

உன், சித்தப்பா!


## காந்தீய சீடர்கள் டயரின் வாரிசுகளாகின்றனர்

பாரத புத்ரர்களின் ஆட்சியில் எதற்குப் பஞ்சம் வந்தாலும் வரும். ஆனுல் துப்பாக்கிப் பிரயோகங்கள், தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப்புகை ஆகியவைகளுக்கு மட்டும் பஞ்சமே வராது. மனித உயிர்தான் இவர்களின் ஆட்சியில் மிக மலிவான பொருள்!

மைசூர் நகரில் சர்வ கலா சாலை வாலிபர் விழா நடக்கிறது. அது சம்மந்தமாக கலா நிகழ்ச்சிகளும் நடக்கின்றன. அந்த நிகழ்ச்சிகளுக்கு மாணவர்கள் இலவசமாக அனுமதிக்கப் படவில்லை. இதைஆட்சேபித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் மீதுதான் போலீசார் சுட்டிருக்கின்றனர். ஒரு மாணவர் மாண்டார். இச்சோகச் செய்தியினின்றும் நாம் விடுபவதற்கு முன்பு, வேறு ஒரு அவலச் செய்தியினை நாடாள்பவர்கள் நாட்டுக்கு அளிக்கிருர்கள்.

விசாக பட்டணம் துறைமுகத் தொழிலாளர்களின் மீது துப்பாக்கி கொண்டு சுட்டிருக்கிருர்கள். ஒருவர் மாண்டதாகச் செய்தி கூறுகிறது.

சீடர்களின் இப்புனித காரியங்களைக் காண உத்தமர் காந்தியார் உயிரோடில்லை – அது ஒரு வகையில் மனதிற்கு ஆறுதல்!



மலர் 1] [இதழ் 47

# கவர்னரின் வாய்ப்பந்தல்!

சனியன்று துவங்கிய சென்னை சட்ட மன்றக் கூட்டத்தில் கவர்னர் விஷ்ணுராம் மேதி பேசியுள்ளார். அந்தக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. அதற்குரிய காரணத்தை நாடு நன்கறியும். கவர்னர் பதவியினைப் பற்றிக் கழகம் தனது தெளிவான கருத்தை மக்களுக்கு ஏற்கனவே எடுத்துச் சொல்லியுள்ளது.

கவர்னர் பதவியே தேவையற்ற'ஒன்று. ஏழை மக்களின் வரிப் பணத்தைப் பாழ்படுத்தும் வகையில் அந்தப்பதவி உருவாக்கப் பட்டிருக்கிறது. வெள்ளையன் காலத்தில் அவர்களின் நலனைக் கண் காணிப்பதற்காக ஏஜண்டுகள் தேவைப் பட்டார்கள். கவர்னர்கள் போன்ற ஆட்களின் மூலம் தங்களது மூல எண்ணங்களை செயல் படுத்திக் கொண்டார்கள். அந்நியன் அகன்ற பின்பும், ஆதிக்கத்தின் அறிகுறியான கவர்னர் பதவி ஏன் என்பதுதான் கழகத்தின் கேள்வி. நமது கண்டனத்தை டில்லி ஆதிபத்ய வாதிகளுக்குத் தெரிவிக்கும் வகையில், ஆண்டுதோறும் கவர்னர் சட்டமன்றத்தில் துவக்க உரையாற்றும்போது, கழக சட்ட மன்ற உறுப்பினர்கள் அக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை: அதே நோக்கத்துடன் தான் இந்த ஆண்டும் கவர்னர் உரையின்போதும் கழக சட்ட மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளாமல், அதன் வாயிலாக நாட்டு மக்களின் ஒன்று பட்ட அதிர்ப்திக் குரலை காட்டியுள்ளார்கள்.

கவர்னர் உரையின் வாயிலாக நாடாளுமநாயகர்களின் சிந்தனை ஓட்டம், செயல்திட்டம் ஆகியவைகள் எந்தத்திசை நோக்கிச் செல்கிறது என்பதனை ஒருவாறுக யூகிக்க முடியும்.

" இன்றைய நிலையைக் குறித்து நாம் வரைந்துள்ள சித்திரத்தில் ஒரு கரும் புள்ளி உண்டு. அத்தியாவசியப் பொருள்கள், அதிலும் குறிப்பாக, உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்து கொண்டே யிருப்பதுதான் அது. ஜனத் தொகையின் பெரும் பகுதியினரான நிலத்தில் பாடுபடுவோருக்கு உணவு விலைஉயர்வால்உடனடி நன்மை கிடைக்குமென்பது உண்மை. ஆனால் நிரந்தர வருமானமுள்ள நகர்ப்புறத்தில் வசிப்பவர்களுக்கு அதனால் பெரும் பாதகம் ஏற்பட்டுள்ளது '' என்ற கவர்னர் தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளார். உணவுப்பொருள்களின் விலைவாசி உயர்வால் உண்மையான பயனை யார் அடைகிறார்கள் என்ற உண்மையினை நாம் அறிவோம். கோழி கூவுவதற்கு முன்எழுந்து, கோட்டான் கூவியபிறகு தனதுஇல்லம் திரும்புகிறனே அந்தஏழை உழவர் சமுதாயம் நிச்சயம் அதனைப் பெற முடியாது. தங்களின் உழைப்பின் உரியபயனை நிலப்பிரபுக்கள் தட்டிப் பறிக்காமல் இருப்பதற்கே பெரும் போராட்டங்கள் நடத்த வேண்டியிருக்கிறது. பயனடைந்தவர்கள் அனைவரும் விரல் விட்டுஎண்ணக் கூடிய வெகு சில மிட்டா மிராசுகள்தான் என்பதனை, கவர்னர் அவர்கள்கண நேரம் எண்ணிப் பார்த்தால், அவரின் உள்ளுணர்வே உண்மை நிலையினைப் படம் பிடித்துக் காட்டும். என்றாலும் தான் ஈடுபட்டிருக்கின்ற பணிக்கேற்ப, நாட்டு மக்களின் கவனத்தை உண்மைக் காரணத்திலிருந்து, திசை திருப்ப வேண்டயிருக்கிறது. நாடு அவரின் உள்ளத்தை உணரா விட்டாலும் நாம் அதை தெளிவாக உணர்வோம்.

கசப்பான நிலைமைதான் என்றாலும் ஒருஉண்மையினை கவர்னர் தனது பேச்சில் ஒப்புக்கொள்கிறார். எவ்வளவோ முயன்றும், பல திட்டங்களைத் தீட்டியும், விழிப்புடனிருந்தும் தனது ஆட்சியில் அந்தக் கரும்புள்ளியினை அகற்ற முடியாமைக்காகக் கலங்கிக் கண்ணீர் வடிக்கிறார். கடந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் பல, நம்மை நாடாளும் வாய்ப்பைப் பெற்ற நாயகர்கள், எவ்வளவு கல் மனம் கொண்டவர்கள் என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றன. மனித உரிமைகளை தனது காலில் போட்டு மிதித்து, துவைத்தபோது, அதனை எடுத்துக் காட்டிய எதிர்க் கட்சிகளையெல்லாம் கேலி மொழியாலேயே அலட்சியப் படுத்தியிருக்கிறார்கள். மமதைமலையின் ஆணவ உச்சியில் அமர்ந்திருந்த அவர்கள்தான், எதிர்க் கட்சிகள் அனைத்தும் எடுத்துக் காட்டிய ஒரு உண்மையினை இன்று ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளார்கள்.

கட்டுபாடற்ற விலைவாசி உயர்வுதான் தனது ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள கரும் புள்ளி என்று கவர்னரே ஒப்புக் கொள்கிறார். இதே உண்மையினைத்தான் சர்வகட்சிகள் கடந்த சில திங்களாக 'சுட்டிக் காட்டி வந்தன.'

நோயின் தன்மை மட்டும் மருத்துவனுக்கு புரிந்து பயனில்லை. அதனைத் தீர்க்கும் வகையினையும் தெளிவாகக்காட்ட வேண்டும். அதுதான் சிறந்த மருத்துவனுக்கு அடையாளம்.

உணவு உற்பத்தி பெருகியும், விலைவாசிகள்குறையவில்லை என்று கவர்னர் கூறுகிறார். அதனைத் தடுத்த நிறுத்த கவர்னரும், நாடாளும் அமைச்சர்களும் காட்டும் வழி என்ன? இதனைத்தான் மக்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்விற்கு பற்றாக் குறை உற்பத்தி காரணம் அல்ல என்பதனைக் கவர்னரே ஏற்றுக்கொள்கிறார். அதனை மெய்ப்பிக்கும் வகையில் புள்ளி விபரங்களையும் கொடுத்திருக்கிறார். உபரியாக பல லட்சம் டன் தானியத்தை நமது மாநிலத்தில் உற்பத்தி செய்கிறோம் என்பது அவரின் வாதம். கேரளம் போன்ற அண்டையிலுள்ள பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஆண்டுதோறும் 2 லட்சம் டன் ஏற்றுமதி செய்வதாகவும் அவரே குறிப்பிடுகிறார். அவரின் பேச்சுக்கள் நமக்கு ஒரு உண்மையினைத் தெளிவாகப்படம் பிடித்துக் காட்டுகிறது. உணவுப் பொருள்கள் விலைவாசி உயர்விற்கு உண்மைக்குற்றவாளிகள் யார் என்பது அவருக்குத் தெரியும். அவர்கள் அனைவரும் தனது கட்சியின் பாதுகாவலர்கள் என்பதற்காக, பிரச்சனையை பூசி மெழுகுகிறார்.

விலைவாசி உயர்விற்கு அவர்காட்டும் பரிகாரம் நம்மால் ஏற்றுககொள்ள முடியாத ஒன்றாகும். உணவு உற்பத்தி பெருகுவதே விலைவாசி குறைவதற்கு வழி என்கிறார். கடந்த ஆண்டுகளிலெல்லாம் உணவு உற்பத்தி பெருகியிருந்தும் விலைவாசி குறையவில்லையே, அதற்குரிய காரணம் என்ன? மீண்டும் உற்பத்தி பெருகினாலும் இதே நிலைதானே நீடிக்கும் என்று கேட்டால் ஊமைகளாக மாறுகின்றனர்.

நாகபுரிக் காங்கிரஸ் 1959 இறுதிக்குள் நிலவுடமைகளுக்கு உச்சவரம்பு கட்டும் மசோதாவை மாநில சர்க்கார்கள் நிறைவேற்ற வேண்டும் என்று தீர்மானம் தீட்டியது. இன்று என்ன நிலைமையைக் காணுகின்றோம். 1959-ம் ஆண்டின் சட்ட மன்றத்தின் இறுதிக்கூட்டம். நடந்துகொண்டிருக்கிறது. இந்த கூட்டத்தில் நிலவுடமைக்கு எல்லை வகுக்கும் மசோதா சம்பந்தப்பட்டவரை அதன் விபரங்கள் தயாரிக்கப் பட்டு வருகின்றன என்று கவர்னர் அவர்கள் தனது உரையில் குறிப்பிடுகிறார்.

டிசம்பர் மாதத்திய சட்டமன்றக் கூட்டத்தில் நிலவுடமைக்கான மசோதா நிச்சயம் விவாதத்திற்கு வரும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். அது நடைபெறவில்லை. மாறாக கவர்னரின் பேச்சோ பேரிடிபோல் அமைந்துள்ளது. கடந்த பொதுத்தேர்தலுக்குப்பின் நடந்த ஒவ்வொரு கூட்டத்திலும் கவர்னரும் நிதியமைச்சரும் மாறி மாறி நிலச்சட்டம் விரைவில் வரும் வரும் என்று தொடர்ந்து வாக்குறுதி அளித்துவந்தார்கள். அவைகள் அனைத்தும் வாய்ப்பந்தலாக மாறிவிட்டன. மீண்டும் அடுத்த பொதுத்தேர்தல்வரையிலும்கூட இதேபோக்கினை கடைப்பிடித்து, பாதிக்கவிருக்கும் மிட்டா மிராசுகளுக்கு புதிய பாதுகாப்புகளைத் தேடித்தருவார்களோ என்றுகூட எண்ண வேண்டிருக்கிறது.

கவர்னரின் பேச்சின் இறுதிப்பகுதியினைக் கூர்ந்துநோக்கினால், டில்லிஆதிக்கத்தின்விளைவாக எவ்வளவு முன்னேற்றங்கள் நம் மாநிலத்தை பொறுத்தவரை தடைபடுத்தப் பட்டிருக்கின்றன என்ற உண்மை எளிதில் புலப்படும். சேலத்தில்அலுமினியதொழிற்சாலை மேட்டூரில்காகிதத் தொழிற்சாலை ஆகியவைகள் ஏற்படுத்துவது பற்றிய பேச்சு முடியும் கட்டத்தில் இருக்கிறதாம்.

சேலம் இரும்பையும் நெய்வேலி நிலக்கரியையும் கொண்டு எஃகு உருக்குதொழிற்சாலை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாம்.

காவிரிஆற்றங்கரையில்மண்ணெண்ணய்எடுப்பதுபற்றியும், ஆராய்ச்சி நடத்துவது அவசியம் ஆகிறதாம்.

சேது சமுத்திரத் திட்டத்துக்கு முதலிடம் தந்து புதுத் துறைமுக வசதிகளைஏற்படுத்த முயற்சி செய்யவேண்டுமாம்.

கவர்ச்சிகரமான எண்ணங்கள்தான் - ஆனால் நடைமுறையில் எந்தஅளவு செயல் படுத்தப்போகிறார்கள் என்பதுதான் நாடு கேட்கும் கேள்வி!

ஆயிரம் வளங்கள் இருந்தும், சென்னை அரசிற்கு உரிமையில்லாததால், நாடாள்பவர்கள் வாய்ப்பந்தல் போடுவதைத்தவிர, உருவாக எதையும் செய்ய முடியாது என்பதனைத்தான் கவர்னர் மேதியின் சட்டமன்ற துவக்க உரைப் பேச்சு நாட்டிற்கு எடுத்துக் காட்டுகிறது!




## கடந்த இதழ்களில்...

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி. முகலாய மன்னர்களின் ஆதிக்கம் குறையத்துவங்கிய நேரம். தென்னகத்தில் ஐதராபாத் நிஜாம் பெயரளவில் டில்லி பாதுஷாவின் பிரதிநிதி. அவனுக்குக் கட்டுப் பட்டவன் ஆற்காடு நவாப். அவனின் செங்கோலுக்குக் கீழிருந்தது தமிழ்மண். தஞ்சைத் தரணியோ விஜய நகரப் பேரரசின் தளநாயகர்களின்கோட்டமாகவும் சர்தார்களின் சபா மண்டபமாயும் மாறியது. சரபோஜி என்ற மன்னன் ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு குத்தகை என்று பேசி அரசநிர்வாகத்தையே வாடகைக்கு விட்டான். வர்த்தகம் செய்ய வந்த வெள்ளைக்காரன் நாடாளும் பேறு பெற்றான், தென்னகத்தின் அமைதியற்ற அரசியலைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான். நாட்டில் நல்லரசில்லை. தடியெடுத்தவன் தண்டல் நாயகமானான். கோலெடுத்தவன் குறுநில மன்னனானான்.

கள்ளிக்கோட்டையில் சாமோரின். கேரளக் கரையில் வேறு அரசு. தென்பாண்டி மண்டலத்தில் நாய்க்கர் வமிசம். அது எட்டாத இடங்களில் பாளையக்காரர்கள். மைசூர் மண்டலத்தில் கொய்சால பரம்பரையின் வீழ்ச்சிக்குப் பிறகு விஜய நகர தளகர்த்தகர்கள் ஆட்சிபீடமேறினர். இப்படித் தென்னகத்தின் எல்லாப் பகுதிகளிலும் நிலையற்ற அரசுகள்.

தென்னகத்தின் அரசு உரிமைப் போராட்டங்களில் தங்களின் ஆதிக்க உரிமைப் போராட்டம் தொக்கியிருப்பதாக பிரெஞ்சுக் காரனும் ஆங்கிலேயனும் மோப்பம் பிடித்தனர்.

நாடு வேட்டைக் காடாகியது. நாசத்தின் நர்த்தனம் எங்கும் தாண்டமாடியது. இந்தக்கொடுமையினை எதிர்த்து தென்னகத்தின் பல்வேறு பகுதிகளினின்றும் குரல் எழுந்தது. திருநெல்வேலிச் சீமையிலே இருந்து வந்தது. கொங்கு நாட்டு மண்ணிலேயிருந்து எதிரொலித்தது. மைசூர் மண்டலத்திலேயிருந்து ஓர் சூருவளி கிளம்பியது.

ஐதரின் திருநாமத்தை லண்டனும் பாரிசும்பயத்துடன்உச்சரித்தன. ஐரோப்பியமண்டலம்அவன் பெயரைக்கேட்டுநடுநடுங்கியது. வடக்கே வெள்ளையரைஎதிர்த்து சிப்பாய் கலகம் என்ற பெயரிலே எதிர்ப்புக்கொடி உயர்த்துவதற்கு எழுபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே போர்க்கோலம் பூண்ட ஐதர் கொடியவன் ஒருவனின் வஞ்சக எண்ணத்தால் அவனது இலட்சியம் நிறைவேறுவதற்கு முன்பு கொலை செய்யப்பட்டான். அவன்மைந்தன் திப்பு அரியணை ஏறியதும் ஆங்கிலேயருக்கு ஓர் அபாய அறிவிப்பு ஆனான்.

கோவை சேலம் வட்டங்கள் மைசூர் மண்டலத்தில் அந்த நேரம் அடங்கியிருந்தன. தமிழகத்தின் அல்லோலகல்லோலத்தின் சாயல் அவ்வளவாக அந்தப் பகுதி மக்களுக்குத் தெரியவில்லை. கொங்குநாட்டுக் குடியானவன் மற்றவர்களைக் கவனிக்கவில்லை. அந்த நேரத்தில் காங்கேயத்திற்கும் ஈரோட்டிற்கும் இடையிலே உள்ள வட்டாரத்தில் ஒரு வீரன் தோன்றினான்.

பழைய கோட்டை என்ற திருப்பெயரிலே இன்று வழங்கும் ஊரின் ஆதிநாள் பெயர் ஆனூர். பாண்டிய மன்னன் தனது படைத்தலைவன் கரியான் சர்க்கரை என்பானுக்கு அவனது வீர தீரத்தை மெச்சி காங்கேயநாட்டுக்கு அதிபதியாக்கினான். கடந்த எண்ணூறு ஆண்டுகளாக அவன் வழிவந்தோர் கொங்கு மண்டலத்தைச்சேர்ந்த இருபத்து நாலு நாட்டு வேளாளர்களுக்கும் தலைவராகப் பட்டம் சூட்டப் பெற்றனர். பட்டக்காரார் என்ற சிறப்புப் பெயரினையும் பெற்றனர்.

ஐதர்அலி அரும்புமீசை வாலிபனாக இருந்தபோது ஆனூர்க் கோட்டைக்கு கொற்றைவேல் சர்க்கரை மன்றாடியார் அரசரானார். காங்கயம், ஆரியப்பட்டி ஆகிய இரு இடங்களில் திருமணம் செய்தும் இருவருக்கும் சந்ததியில்லை. மனவாட்டத்தைப் போக்க உறவினர் முறையில் சேனாபதி, ரத்தினம் என்ற இரண்டு பிள்ளைகளை எடுத்து வளர்ப்புப் பிள்ளைகளாக்கிக் கொண்டார். வயது வந்ததும் சேனாபதி ஆனூர் பட்டைக்காரர் ஆனார். இரத்தினக் கவுண்டர் ஆனூருக்கு மேற்கேயுள்ள மேலைப் பாளையம் என்ற ஊரில் பெருமையுடன் வாழ்ந்தார். குழந்தைசாமி, தீர்த்தகிரி, பெரிய தம்பி, கிலேதார், குட்டிசாமி அவர் பெற்ற ஆற்றலுள்ள மக்கள்மார். குடும்பத்தின் குலவிளக்கு மகள் மயிலாத்தாள். குழந்தைசாமிக்கும் குட்டிச்சாமிக்கும் திருமணமாகி விட்டது. மற்றவர்கள் கலியாணமாகாத கட்டைகள். தம்பிமார்கள் மூவரும் செல்லப்பிள்ளைகளாயினர். தீர்த்தகிரி இரண்டு தம்பிமார்களுக்கும் தலைவனானான். கட்டுமஸ்தான தேகமும், கண்டோர் மயங்கும் காந்தக் கவர்ச்சியும், தீர்த்தகிரியை வெகுவிரைவில் அனைவருக்கும் அறிமுகப் படுத்தியது.

கொங்குநாட்டின் வடக்கு எல்லையில்கும்பினியாருக்கும் மைசூரானுக்கும்கடும்போர்! கோவை கோட்டத்தின்மீது மைசூரின் பிடிப்பு இருந்தது. தலைமை அதிகாரி சங்ககிரி கோட்டையில் கொலுவீற்றிருந்தான்.

ஓர் நாள் சிவன்மலையருகே தீர்த்தகிரி வரி வசூலித்துச் சென்ற மைசூர் அரசின் ஆட்களிடமிருந்து பணத்தை எடுத்துக்கொள்கிறான். விபரம் கேட்ட கோட்டை அதிகாரியின் கண்களிலே கோபக்கனல் வீசியது. அவமானம் நடந்த திசைநோக்கி சிறுபடை கிளம்பியது.

இதற்கிடையில் தீர்த்தகிரியை வியப்பில் ஆழ்த்தும் ஓர் நிகழ்ச்சி நடைபெற்றது. அவனுக்கு முன்பின் தெரியாத நூறுபேர் கொண்ட ஓர் படை களத்தில் நுழைந்து அவனுக்குத் துணை புரிந்தது.

அவர்கள் வேறு யாருமல்ல— சென்னிமலை முத்துவேலப்பரின் ஆட்கள்தான்! அடுத்த நாள் சென்னிமலை நெடுஞ்சாலையில் ஆரோகணித்து வரும் குதிரையின் குளம்படிச் சத்தம் கேட்டது. முத்துவேலப்பருக்கு நன்றி கூறத்தான் தீர்த்தகிரி இவ்வளவு வேகமாகச் சென்றுகொண்டிருந்தான். தலைவாயிலிலே முத்துவேலப்பர் நின்றார். 'சின்னமலை' என்று வாஞ்சை ததும்ப அழைத்தார்.

உணவு முடிந்தது. பேச்சுவாக்கில் முத்துவேலப்பர் ஆனூர்க் குடும்பத்தில்திருமணத்தொடர்பு கொள்ளும் விருப்பத்தை வெளியிடுகின்றார். ஊர் சென்றதும் தம்பியைக் கலந்து பதில்அனுப்புவதாகக்கூறி விடைபெறுகிறான் தீர்த்தகிரி.

தம்பியிடம் நடந்ததைச் சொல்கிறான் சின்னமலை. அவனோ திருமணம் செய்து கொள்வதில்லை எனமறுமொழிகூறுகிறான். எதற்கும் மறுமொழி பேசாத பெரிய தம்பி தடைசொல்லியது சின்னமலைக்கு ஆத்திரத்தைக் கிளறியது.

பெரியதம்பி அண்ணனிடம் ஓலை ஒன்றை நீட்டினான். அதில் தன் உள்ளத்தைத் திறந்து காட்டினான்.

பழனிமலை — கொங்குநாட்டு வேளாள வாலிபர்கள் கும்பல்

### கவனத்தீற்கு !

★

ஆசிரியர் அவர்கள் வெளியூர் சென்றிருப்பதால் "கொங்கு நாட்டுத் தீரன் சின்னமலை" — தொடர்கதை இந்த இதழ்களில் இடம் பெறவில்லை. கடந்த எட்டு இதழில் வெளிவந்த கதையின் சுருக்கத்தை வெளியிட்டுள்ளோம். அடுத்த இதழ் முதல் தொடர்கதை துவளாமல் வெளிவரும்.

கும்பலாகக் கூடும்இடம். பெரிய தம்பி அவர்களை தேசபக்தி கொள்ளச்செய்ய, அவர்களைச் சந்திக்க தக்கஇடம் அது என்று தேர்ந்தெடுத்திருந்தான். வழக்கம்போல் கார்த்திகைதீபத்திற்கு பெரியதம்பி புறப்பட்டான். பழனியை அடையும்போது நள்ளிரவு. கோவில்மணி அர்த்த ஜாம பூஜை ஆரம்பமாகிவிட்டது என்பதை அறிவித்தது. வேளாளர்மடத்தை நோக்கி அவன் தன் குதிரையைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

வேளாளர் மடத்தின் மாடிச் சுவர் முழுதும் வரிசை வரிசையாக சுட்டிகள் எரிந்தன. பார்ப்பதற்கு அக்காட்சி ரம்மியமாய் இருந்தன. அதில் லயித்திருந்தான்.. அந்தவிளக்கு வரிசையின் ஓரத்தில் நின்றமானின் விழிகள் இவன் கண்களில் பட்டுத்தெரித்தன. அடித்த சிலையானுன். பொன்னவிர் மேனியின் பளபளப்பை, சுட்டும் கரு விழியின் ஒளியினை எடை போட்டுக் கொண்டிருந்தது அவனது இளமை உள்ளம்.

"அய்யோ! அப்பா!" என்ற கூச்சல் கேட்டு திடுக்கிட்டான். அந்தப் பெண்ணின் சேலை பற்றி எரிந்து கொண்டிருந்தது. அவளுக்கு மேலேதீப் பிழம்பு பறந்து கொண்டிருந்தது. பெரியதம்பி மறுவினடி மாடி மீது பறந்தான்.

நினைவற்று அந்தப்பெண் தரையில் கிடந்தாள். ஏது செய்வது என்று பெரியதம்பிக்குப் புரியவில்லை. தன்னிடமிருந்த தண்ணீரை அவள் முகத்தில் தெளித்தான். சிறிது நேரத்தில் கண் விழித்தாள். முன் பின் அறியாத ஆடவனின் மடியில் தலை புதைந்து கிடப்பதை உணர்ந்தாள். தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள். முயற்சி தோல்வியைத் தழுவியது.

கண்ணோடு கண் பேசின. விழிவாசல்வழி தங்கள் உணர்வுகளைப் பறிமாறிக் கொண்டனர். அன்புள்ளங்கள் ஒன்றோடுஒன்று கலந்தன. எவ்வளவு நேரங்கள் மோன மயக்கத்தில் காலம் சென்றதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்தோம் என்பதை அவர்கள் அறியவில்லை. திடீரென கோவிலுக்குச் சென்றிருந்த பெற்றோர்கள் திரும்பி வந்து, 'கதவைத் தட்டினர்.' ஒருவரை ஒருவர் சரியாகத் தெரிவதற்கு முன்பே பிரிய வேண்டி நேரிட்டுவிட்டது.

இந்த விபரங்களை யெல்லாம் பெரியதம்பி தனது அண்ணனுக்குத் தீட்டிருந்த ஓலையில் எழுதியிருந்தான். படித்து முடித்தபின் சின்னமலையின் விழிகளின் ஓரங்களில் தண்ணீர்தேங்கி நின்றது. தம்பியின் மறுப்புரையின் உட்ப் பொருளை உணராமல், தவருக எண்ணியதற்குக் கண நேரம் சின்னமலை வருத்தப் பட்டான். தம்பியின் நெஞ்சில் புகுந்த அந் நேரிழை அவனியின் எந்த மூலையிலிருந்தாலும் தேடிப் பிடித்து திருமணம் செய்து வைப்பது என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

காலையில் கண் விழித்ததும் நேராக பெரியதம்பியிடம் நேரில் எல்லா விபரங்களையும்பேசுவது என்று திட்டமிட்டிருந்தான். ஆனல் பெரியதம்பியோ விடியற் காலையே குளித்து விட்டு சென்னிமலைப் பக்கம் போய் வருவதாகச் சொல்லிச் சென்றசேதி கிடைத்தது. நடப்பது நடக்கட்டும் ஒன்றும் கெட்டு விடாது. என்று நினைத்துக் கொண்டே வீட்டுத் தோட்டத்துக் கிணத்துப் பக்கம் அவன் கால்கள் நகர்ந்தன.

அண்ணன் குழந்தைசாமியும் அண்ணி கெம்பாயம்மாளும் பேசிக் கொண்டிருக்கும் குரல் கேட்டது. குடும்பத்தில் தம்பிமார்களின் போக்குப் பிடிக்கவில்லை என்று குறைபட்டுக் கொள்கிருள். குழந்தைசாமியோ சமாதானம் எவ்வளவு கூறியும் அவளுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. தன் பிறந்தகமாகிய ஆரியப்பட்டிக்குப்போக ஆயத்தமாகிருள். குழந்தைசாமிக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. செடியருகே நின்று கொண்டு சின்னமலை நடந்த பேச்சுக்கள் அனைத்தையும் கேட்டுக்கொண்டேயிருந்தான்.

சென்னிமலை முத்துவேலப்பரின் மாளிகை சோபைஇழந்து காணப்பட்டது. கொஞ்ச நாட்களாய் அவரது மகள் வள்ளி நாயகி துரும்பாய் இளைத்திருந்தாள். அவளது மெலிவுக்கான உண்மைக் காரணத்தைப் புரியாத முத்துவேலப்பர், செல்வமாக வளர்த்த சிங்கார மகள் தன்னைப்பிரிந்து போக வேண்டியுள்ளதே என்ற ஏக்கம் அவள் உடலைப் பற்றிக் கொண்டதாகத் தனக்குத்தானே காரணம்சொல்லிக்கொண்டார்.

பழனியிலிருந்து திரும்பியதும் அவள் ஆட்டமெல்லாம் அடங்கி விட்டது. ஆரம்பத்தில் எதிர் காலத்தில் தான் வாழப்போகும் இன்ப வாழ்வை நினைத்துமனம் மகிழ்ந்தாள். இத்தனை நாளும் அவள் பார்த்துக்கொணடிருந்த வெணணிலாவும், நட்சத்திரக் கூட்டமும புதுப்புதுக் கற்பனைகளைக் கிளறியது.

ஆனூர்க கோ[illegible]டை வாலிபர் அவசியம் தன்னை சந்திப்பார் என்ற உறுதி இருந்தது. ஆனல் மாதங்கள் பலஓடிவிட்டன. அவரைக் காணோம். அவளின் பேதை உள்ளம் என்ன வெல்லாமோஎண்ணத்தொடங்கியது. மேலப்பாளையம் குடும்பத்தில் தந்தை சம்பந்தம் கொள்ள முயலும் எண்ணம் நினைவிற்கு வந்ததும் மனதில் ஒரு விதக் குழப்பம் சூழ்ந்தது.

மாளிகை பெரும் சிறைச்சாலை போலக் காட்சி அளிததது. சாளரக் கம்பிகள் காரக்கிரகத்தை நினைவூட்டியது. மனம் அமைதி காண தோட்டத்துப் பக்கம் சென்ருள்.

எதிர்பாராத சந்திப்பு – ஆம்! யாருக்காக பகலும் இரவும் எண்ணி எண்ணி மனம்நொந்து கொண்டிருந்தாளோ, அவன் தன் எதிரில் நிற்பதை கண்டாள். தன் கண்களை முதலில் நம்பவே இல்லை. கண நேரம் திகைத்து நின்ருள். பிறகு சமாளித்துக் கொண்டாள்.

கண்ணும் கண்ணும் கலக்கும் போது வாய்ப்பேச்சு. எதற்கு? மாவிலைமெத்தையில்பெரியதம்பி அமர்ந்திருந்தான். அவன்மடியில் வள்ளி நாயகி! அவன் பார்வை பட்டவுடன் பத்தரை மாற்றுத் தங்கமாளுள். அவள் பசலை ஒரு நொடியில் பரந்து விட்டது.

முத்துவேலப்பரைக் காண வந்திருப்பதாக பெரியதம்பி கூறுகின்ருன், வள்ளிநாயக தனக்குள்ளே சிரித்துக்கொள்கிருள். சிறிது நேரத்தில் முத்து வேலப்பர் பெற்றெடுத்த பொற்கிளி தான் தன் நெஞ்சில் புகுந்த நேரிழை என்று அறிந்தபோது, பெரிய தம்பியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பெரியதம்பி அவனதுவாழ்வில் என்றுமேஇப்படி ஓர் பேருணர்வைப் பெற்றதில்லை. ஆர்வமும் ஆனந்தமும் அவனது திருமுகத்திற்கு அழகூட்டியது. அண்ணனைக் கணடு விஷயத்தை உடன் சொல்ல வேண்டும் என்று அவன் உள்ளம் விரும்பியது.

ஊர் திரும்பியவுடன் பெரிய தம்பி தனது அண்ணன் சின்னமலையிடம் முத்து வேலப்பரின் மகள்தான், தான் குறிப்பிட்ட பெண்என்று தட்டுத் தடுமாறி கூறினன். சென்னிமலை சம்பந்தத்தால் தம்பியின ஆசையும் நிறைவேறுகிறது, தன் வாக் குறுதியுமநிறைவேறுகிறது. என பதிலே சினனமலைக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

கெம்பாயம்மாளின் தந்தை ஆரியப்பட்டி ஆறுமுகக் கவுண்டர் எதையும் ஆழமாக ஆராய்ந்துப்பார்க்கும் போக்குடையவரல்ல. படபடத்த சுபாவக்காரர் குழந்தை குட்டிகளுடன் புருஷன் வீட்டிலிருந்து மகள் வந்துவிட்டது அவருக்கு முதலில் பிடிக்கவில்லைதான். மகளுக்கும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார் பயனில்லை. மகளின் கண்ணீர்புத்தி சொல்லும் பழக்கத்தை நிறுத்தியது. பிறந்தகுடும்பத்தைப்பற்றி ஏதோ இழிவாகக் கணவன் வீட்டார் பேசியிருக்கிருர்கள். அதுதான் தன் மகளின் கோபத்திற்குக் காரணம் என்று முடிவு செய்துகொண்டார். இருக்குமா இருக்காதா அதுபற்றி எல்லாம் சிந்தித்து முடிவெடுக்கஅவருக்கு பழக்கமில்லை. தன் குடும்பத்தை இழிவுபடுத்திப் பேசினுர்கள் என்பதை அவரால் பொறுக் முடியவில்லை. அவர்களை ஒரு கை பார்க்கிறேன எனறு மகளிடம் ஆணையிட்டார் ஆரியப்பட்டி ஆறுமுகக் கவுண்டர்.

[ தொடரும் ]

# பொருமுகின்ற – – கவிதைப்பெண்!

★ கோவை. சபாபதி ★

ஏடெடுத்தால் என்னிடத்தில் வருவாள், ஏட்டின்
எழுத்தெல்லாம் அவளாகி நிற்பாள், இந்த
நாடடுத்த நற்சோலை அருவிக் கூட்டம்,
நற்ருேகை மயிலாட்டம் வின்மீன் கூட்டம்,
ஆடிவரும் தென்றலொளிர் செஞ்ஞா யிற்ருல்
அடிவானம் பெறுகின்ற இயற்கை வண்ணம்,
ஏடவிழ்ந்து மலர்ததமலர் ஈட்ட மெங்கும்
இருக்கின்ருள் 'கவிதைப்பெண்' சிரிக்கின்ருளே!

காடடுத்த பெருமலையின் உயர்ந்த தோற்றம்,
கரைகுத்திப் பாய்கின்ற ஆற்றின் ஓட்டம்,
ஓடுகின்ற மானினங்கள் உலவும் மாட்சி,
ஒலிக்கின்ற புள்ளினங்கள் பறக்கும் காட்சி,
நீடுயர்ந்து கிளைபெருகி நிழலை நல்கும்
நெடுமரங்கள், அவைதழுவும் கொடியின்
மேடடுத்த புல்வெளிகள் ஆய எங்கும் [தோற்றம்
மிளர்கின்ருள் 'கவிதைப்பெண்' ஒளிர்கின்ருளே!

நெஞ்சுலர்ந்து நாவறண்டு நினைவும் அற்று
நெட்டுயிர்த்துக் காதடைத்துக் கண்கள்
கஞ்சியின்றி வாடுகின்ற ஏழை நெஞ்சில் [சோம்பிக்
கசிகின்ற பெருந்துயராகிக் காட்சி தந்தாள்!
கொஞ்சமுமே இரக்கமிலார் சதியால் தங்கள்
கோதகன்ற காதலிலே தோல்வி கண்டு
நெஞ்சொடிந்து மாள்கின்ற இளமை நெஞ்சில்
நெளிகின்ருள் 'கவிதைப்பெண்' அழுகின்ருளே!

கட்டுடலும் கனிமொழியும் கண்டோர் உள்ளம்
கவர்கின்ற பேரெழிலும் கொண்ட பெண்ணைக்
கட்டையிலே செல்கின்ற காலம் வாய்த்த
காமுகனுக் குரிமையென ஆக்கித் தந்து,
எட்டிரண்டு திங்களிலே கிழவன் சாக
ஏதொன்றும் துணையின்றி இளமை வெம்பப்
பொட்டழிந்து பொலிவிழந்து நிற்பாள் நெஞ்சில்
பொருமுகின்ற 'கவிதைப்பெண்' உறுமிநின்ருள்!

நாள்முழுதும் பாடுபட்டு வியர்வை சிந்தி
நலிகின்ற பாட்டாளி உள்ளத் துள்ளும்,
தோள்வலியைப் பெற்றிருந்தும் பிச்சையேற்கத்
தோன்றியதோர் நிலைமையதால் உள்ளம்வாடி
மாளாமல் வாழாமல் வாழும் மானம்
மருவியதோர் மாசற்ற உள்ளத்துள்ளும்
வாழ்கின்ருள் 'கவிதைப்பெண்' புலவோர் நெஞ்சில
வளர்கின்ருள் வளர்ந்துநடம் புரிகின்ருளே!

# பாண்டியன் தலைநகரில் — காலத்தின் தூதுவர்கள்!

அரும் பெற்ற பாவை கண்ணகியின் உள்ளம் இடைக்குல மாது மாதரியின் அன்பிலே நெகிழ்ந்தது. அவர்கள்கொடுத்த பல்வேறு பசுங் காய்களையும், மெல்லிய விரல்கள் சிவக்கும் வரைக்கும் அரிவாள் மணையிலே கண்ணகி அரிந்தனள். அவள் அழகிய முகம் அதனால் வியர்த்தது. செவ்வரி படர்ந்த கண்கள் சிவந்தன, தன் கை அறிந்த அளவிலே தன் கணவனுக்கு உணவு சமைத்தனள். ஈனாத வாழையின் குருத்தினை விரித்து அதன் கண் உணவினைப் படைத்து, உண்க எனக் கோவலனை உபசரித்தனள்.

உண்டபின் இனிதாக ஒரு புறம் சென்றிருந்தான் கோவலன், அழகிய மெல்லிய வெற்றிலையோடு பாக்கும் அளித்து அவன் அருகே சென்று நின்றனள் கண்ணகி. கருமையும் குளிர்மையும் பொருந்திய கூந்தலுடையவளான அவளைத் தன்பால் நெருங்கி வருகவென அழைத்து, அவள் வரவும் அவளைத்தழுவி அணைத்துக்கொண்டவனாகக் கோவலன் தன் உள்ளம் திறந்து பேசுகிறான். இந்த மடந்தையின் மெல்லிய பாதங்கள் பருக்கை கற்கள் மலிந்த காட்டு வழியெல்லாம் கடப்பதற்கும் வல்லமையுடையனவோ? என அவள் நடந்து வந்த துன்பத்தை எண்ணி இரங்கினான். தன் பழைய செயலுக்காக வருந்தினான். "நல்லவர் கைக்கொள்ளாத ஒழுக்கங்களை செய்துவிட்டீர். ஆனால் யானோ, எனக்கு நும்பாலுள்ள அன்பினை சிறிதும் மாற்றாத உள்ளத்துடன் வாழ்ந்து வந்தவள். அதனால் நீர் அழைக்கவும், அதற்கிசைந்து நும்மோடு உடனேயே புறப்பட்டேன்" என்றனள் கண்ணகி.

பெற்றோரையும், குற்றேவல் செய்யும் மகளிரையும், தோழிமார் கூட்டத்தையும் விட்டுவிட்டு நாணமும் மடனும் நல்லோர் போற்றுதலும் உள்ளத்திலே உறுதியாகக் கொண்ட கற்புமே பெருந் துணையாக என்னுடன் வந்தனை. இங்கும் என் மனத்துயர் எல்லாம் போக்கினை. கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி! நின் சிறிய பாதங்களில் ஒன்றினைக் கையிலே எடுத்துக்கொண்டு யான் ஊருட் போய் விலைமாறி வருகிறேன்: இனியும் நீ என்னைத் தவறாக எண்ணி நீ மயங்காதிருப்பாயாக என்று கோவலன் கூறினன். கருமையான கயல்மீன் போன்ற நெடுங் கண்களையுடையவளான தன் காதலியை உடலிறுகத் தழுவினான். அவளருகே ஏவற் பெண்டிர் எவரும் இல்லாது இருக்கும் தனிமையைக் கண்டு தன் நெஞ்சம் கொதித்தான். நீர் வழியும் கண்கள் உடையவன் ஆனான், ஆயர்களின் வீடுகளைக் கடந்து, தளர்ந்த நடையுடன் வீதியிலிறங்கிச் சென்றான் — கோவலன்.

மதுரை நகருள் சென்ற கோவலன் நெடுநேரமாகியும் வரக் காணோம். கண்ணகியின் உள்ளம் கலங்குகின்றது. துன்பம் கட்டுக்கடங்கவில்லை. துருத்தி முனையிலே ஊதி எரியும் நெருப்பின் வெம்மையும் தோற்றுப் போகுமாறு அவள் நெஞ்சம் அழல் எழ உயிர்க்கின்றது.

இதற்குள், 'அரசன் வாழும் அரண்மனையிலிருந்த அழகு மிக்க சிலம்பினைச் சிறிதேனும் அரவம் எழாமல் கவர்ந்த கள்வனாம்' என்று வீரக்கழல் அணிந்த ஊர்க் காவலர் நின் கணவனைக் கொலை செய்யப் போகின்றனர் என்றாள் ஒருவள். அவள் அப்படிச் சொல்லக் கேட்டதும், கண்ணகி, பொங்கி எழுந்தாள். நிலவு பொழியும் திங்கள் பெருநிலத்தில் வீழ்ந்ததுபோலத் தரையிலே முகஞ்சேர விழுந்தாள். செங்கண் சிவக்க அழுதாள். தன் கணவனை 'என் கண்ணா! என் கண்ணா!' என்று கூவி அரந்தி வருந்தினாள். ஏங்கி ஏங்கி அழுது இறுதியாக மயங்கினாள்.

அன்றைய காலைப் பொழுதிலே தன் கணவனைத் தழுவி அவனிடத்திலிருந்து, வண்டுகள் சூழ்கின்ற கரிய அவன் தலைமயிரிற் சூடிய மாலையை ஆர்வமுடன் வாங்கித் தன் நீண்ட குழலிலே சூட்டி மகிழ்ந்தவள் அவள். மாலை வேளையிலோ வெட்டுண்ட புண்ணினின்றும் குதித்த குருதி அவனைச் சுற்றிலும் பெருகிக் கிடக்க அவன் கிடந்ததைக் கண்டாள். 'என் துன்பமெல்லாம் ஒரு வழியாக மறைந்துக் கொண்டிருந்த வேளையிலே, படமுடியாத பெரும்துயரம் யான் பட்டேன். இதுவரை யான் அடையாத பெரும் துன்பத்தினை அடைந்துவிட்டேன். என் கணவன் கள்வனல்லன். என் காற் சிலம்பினைக் கொள்ளும் விலையின் பொருட்டாகப் பொன்தர மனமின்றி என் கணவனையே கொன்றனர். இஃதோர் அறக்கேடு' என்று கூறி நெடிய கயல் போன்ற கண்களிலே வழிந்த நீரைத் துடைத்துவிட்டு, சினத்துடன் அரசனின் வளமிக்க அரண்மனை வாயிலை அடைந்தாள்.

"வாயிற் காவலனே! வாயிற் காவலனே! அறிவு இப்போது அற்றுப்போன, நல்லறமற்ற நெஞ்சத்துடன்தன் இறை முறையினின்றும் பிழைத்தவனின் வாயிற் காவலனே! இணையற்ற அரிகளுடைய சிலம்பு ஒன்றினைக் கையிலே ஏந்தியவள்; நம்கடை வாயிலின் கண் உள்ளாள்." என்று, உன்மன்னனிடம் சென்று அறிவிப்பாய் என்று சொல்லி அனுப்பினாள் கண்ணகி.

வாயிற் காவலன் அரசனிடமிருந்து மீண்டு வந்து அரண்மனையிலே மன்னனிருக்கும் மிடத்தைக் காட்ட, அரசனைக் கண்ணகியும் அணுகிச் சென்றவிடத்து, "நீர் ஒழுகும் கண்களுடன் எம்முன் வந்திருப்பவளே! இளங்கொடியே! நீயாரோ?" என்று வினவினான் மன்னன்.

'தேரா மன்னா! நின் மதுரை நகரிலே புகுந்து, இங்கு, என்னுடைய காற் சிலம்பினை விற்பதற்கு விரும்பி, நின்னிடத்து கொலைக் களப்பட்ட கோவலனின் மனைவியான். கண்ணகி என்பது எனது பெயர் என்றாள்.

'பெண் அணங்கே! கள்வனைக் கொல்விப்பது கடுங்கோன்மை அன்று; முறைதவறாத அரச நீதியே என்பதைக்காண்பாயாக' என்று விளக்கினான் மன்னன்.

அவ்வளவிலே, ஒளிர்கின்ற ஆபரமணிந்த அவள் 'நல்ல முறையிலே நியாயத்தைத் தெளிந்து செயலாற்றாத கொள்கை வேந்தே! என் காற் பொற்சிலம்பு மாணிக்கக் கற்களை உள்ளிடு பரல்களாக உடையது' என்றாள்.

'தேமொழி! நீ உரைத்தவை செவ்வையான நல்ல சொற்கள், எம் உடைமையான சிலம்பு முத்துக்களை உள்ளிடு பரல்களாக உடையது' என்றான் மன்னன்.

காவலர், மன்னன்முன் கோவலனிடமிருந்து பெற்ற கண்ணகியின் அணியான அந்த அழகிய காற் சிலம்பினை வைத்தனர். அரசன் அதனை உடைக்கவும், அவன் வாயருகே மாணிக்கப் பரல் ஒன்று தெரித்தது.

மணி கண்டு மன்னன் பதறினான். 'யான் தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்; பொன் தொழிற் செய்யும் கொல்லனின் சொற்களை உண்மையென்று கேட்டு நடத்த யானோ இந்நாட்டு அரசன்! யானே கள்வன்!' என்று கதறினான். "குடிமக்களைக் காத்து பேணுகின்ற இத்தென்னாட்டின் பாண்டியராட்சி என் காரணமாகப் பிழைத்து விட்டதே! என் ஆயுள் அழிக!" எனப் புலம்பினான்.

## மதுரை மாணவர் மாநாட்டுத் தீர்மானங்கள்

(அ) தியாகராயர் கல்லூரி முதல்வரும், கல்வித் துறையில் அரும்பணி யாற்றியவரும், பேராசிரியருமான திரு. மா. கி. சண்முகம் அவர்கள் மறைவிற்காக இம்மாநாடு வருந்தி [illegible] ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

(ஆ) சுயமரியாதை காலத்தில் இருந்து இந்நாட்டில் அருந் தொண்டாற்றிய டாக்டர்தருமாம்பாள் அம்மையார் இயற்கை எய்தியமைக்கு இம்மாநாடு வருந்துகிறது. தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

— தலைவர்

மாநில மெங்கணும் உள்ள மாணவர் விடுதிகளில் பெருமளவில் குறைபாடுகள் இருப்பதையும் போதுமான அளவு உறைவிடம், உணவு வசதிகள் இல்லாது மாணவர் அவதியுறுவதையும் உடனடியாகக் கவனித்து ஆவனசெய்ய வேண்டும் எனசென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தரையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரையும், சென்னைக் கல்வியமைச்சரையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன் : ஜே. எஸ். இராசு,
வழி : மணிமாறன், கோ. சாமி,

சென்னை அரசினர் அலுவல் துறைப் பொறுக்குத் தேர்வில் சிறப்புத் தமிழ் எடுத்துப்பயிலும் மாணவர்களுக்கு போதிய வாய்ப்பளிக்கும் முறையில் தேர்வு முறையை மாற்றியமைக்கும் படி இம்மாநாடு சென்னை அரசினரைக் கேட்டுக் கொள்கிறது.

முன் : விருதை அமுதன்,
வழி : புகழ்மணி,

சென்னைப் பல்கலைக் கழக பி. ஏ. [ஆனர்சு] எம். ஏ. பட்டதாரிகளுக்கு எம். லிட். பி. எச். டி. ஆராய்ச்சி செய்ய அனுமதிக்கப்படும் வாய்ப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழக பி. ஏ. [ஆனர்சு] எம். ஏ. பட்டதாரிகளுக்கு மறுக்கப் படுகிறது. இந்தக் குறைபாட்டை நீக்க ஆவன செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன் : தொண்டைமான் பி. ஏ.
வழி : விருதை சீனிவாசன்,

மதுரை நகரிலும் வெளியிடங்களிலும் உள்ள நகரவை அலுவலகப் பெயர்களையும் தெருப் பெயர்களையும் கடைகளின் முகவரிப் பெயர்களையும் இனி தூய தமிழில் எழுத வேண்டும் என தொடர்புடைய அனைவரையும் இம்மாநாடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

முன் ; செண்பகம்,
வழி : தவசி,

# கூடிக்கலையும் கும்பாபிஷேகமல்ல!

# மாணவர் மாநாடு ஓர் உலைக்கூடம்!

அந்நிலையே மயங்கி விழுந்து இறந்தான்.

தென்னவனின் அரசமாதேவி உள்ளங்குலைந்து நடுங்கினள்.

அம்மட மொழியாள் தன் கணவனின் பாதங்களைப் பணிந்து வீழ்ந்துதானும் உயிர்துறந்தாள்.

சேரனின் இளவல் இளங்கோ அடிகள்யாத்த சிலப்பதிகாரம் தமிழ்ச் சமுதாயத்தின் தனிப் பெரும் செல்வம். நெஞ்சின் ஆழத்தில் சுவை பல ஊட்டும் வல்லமை பெற்ற காவியம். தேனிலே சேர்ந்திழைத்த தீந் தமிழ்ச் சொற்களால் சேர்த்து பின்னப்பட்டது. தமிழகத்தின் எம்மருங்கும் யாவராலும் போற்றி ஏற்றுக் கொள்ளபட்ட சாகாத இலக்கியம்.

தென்பாண்டி நாட்டின் ஓங்கு புகழ் மதுரையில் திராவிடமாணவர் தம் மாநாடு கூட விருக்கின்றது என்ற சேதி கேட்டவுடன், இளங்கோ யாத்த சிலம்பு, பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சித் திறன், பாண்டிமாதேவியின் கற்பின் திண்மை போன்ற எண்ணற்ற எழுச்சியூட்டும் எண்ணங்கள் தான் மனத்திரையில் நிழலாடின.

ஆண்ட பரமபரையினர் நாம்! மீண்டும் முற்றுகையிடுகிறோம். ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன் புலி வேடம் போடுகின்றான். புல்லளவேனும் நமக்கு மதிப்பு அளிக்க மறுக்கிறான். புலியென நாம் செயல் செய்யவேண்டும். பகலினை நள்ளிரவு என்று எண்ணி இதுவரையில் ஏமாந்துவிட்டோம். விழிப்புற்றெழுவோம். கையிருப்பைக் காட்டுவோம் என்று வஞ்சினம் கூறுவது போன்றிருந்தது மதுரையில் கடந்த 29—11—59 ஞாயிறு அன்று நடந்த திராவிட மாணவர் மாநாட்டின் போர் முழக்கங்கள்.

மதுரை மாணவர் மாநாடு, திராவிட மாணவர் இயக்க வரலாற்றில் ஒரு திருப்பக் கட்டம் என்றே சொல்லலாம். மாணவர்களுக்கு அரசியலில் கொள்ள வேண்டிய பங்குபற்றிப் பல்வேறு எண்ணங்கள் நாட்டில் நிலவுகின்றன. நேரடியாக அரசியலில் ஈடுபட்டு தங்களது உழைப்பை நல்க வேண்டுமென்பது ஒரு பகுதியினரின் வாதம். நேரடி அரசியலில் மாணவர்கள் தங்கள் கவனத்தை ஈடுபடுத்தக் கூடாது என்பது அறிஞர் அண்ணாவின் அறிவுரை.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதா, வேண்டாமா என்பதல்ல இன்றைய பிரச்னை. அரசியல் தனி மனிதனின் வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் பிணைந்திருக்கும் காலம் இது. நிலைமை இப்படியிருக்கும்போது மாணவர்கள் அரசியலைப்பற்றி கவலைப்படக் கூடாது என்பது உண்மைகளைப் பார்க்க மறுப்பவர்களின் கூற்றாகும். அரசியலில் மாணவர்கள் எந்த அளவு பங்குகொள்ள வேண்டுமென்று வரையறுக்கலாமே தவிர, தேவையேயில்லை என்று கூறுவது காலத்துக் கொவ்வாத கூற்றாகும். மதுரை மாணவர் மாநாடு நாட்டில் பலரின் உள்ளங்களை அலக்கழித்துக்கொண்டிருந்தஇச் சிக்கலுக்கு நல்ல விடையளித்தது. மாநாட்டில் கருத்து விருந்தளித்த நண்பர்கள் பலரும் தக்க ஆதாரங்களைக் காட்டி விளக்கமளித்தனர்.

காந்தியார் முதல் மற்ற தேசியத் தோழர்கள்வரை பலர் 1942–ம் ஆண்டு போராட்டத்தின்போது, கல்லூரிகளை விட்டு, பள்ளிகளைத் துறந்து கிளர்ச்சிகளில் ஈடுபடும்படி மாணவர்களைக் கேட்டுக்கொண்டதை பலரும் சுட்டிக்காட்டினர், அது உண்மையும்கூட. சுதந்திராக் கட்சியின் தலைவராகஇன்று பணியாற்றும் என். ஜி. ரங்கா போன்றவர்கள் ஈஜிப்டிலும், சீனத்திலும் மற்ற உலக நாடுகளில் நடந்த விடுதலைப்போராட்டங்களில் மாணவ சமுதாயமும் உயிரோட்டங்களாக இருந்ததை எடுத்துக்காட்டி, இந்திய தேசிய போராட்டத்தித்கும் மாணவர்களின்துணையை நாடிப் பேசிய சங்கநாதப் பேச்சுக்களை நாடு இன்னும் மறந்துவிடவில்லை.

கொடுமைகள், அநீதிகள், அக்ரமங்கள் எங்கு கண்டாலும், எவரிடம் தென்பட்டாலும் தட்டிக் கேட்கும் இயல்பு இளைஞர்களின்வழிவழிவந்த குணமாகும். அதனைத் தெளிவாக உணர்ந்த அரசியல் கழைக் கூத்தாடிகள் சிலர், இளைஞர்களின் ஆர்வத்தையும், உழைப்பையும் தங்கள் கட்சிகளின் அரசியல் சூதாட்டங்களுக்கு சகடக்காய்களாக பயன்படுத்துவதை நமது நாட்கனில் காணுகின்றோம். மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்தக்கூடாது இதில் சகல கடசிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்ற முயற்சியில் முன்னணியில்நின்ற நிதியமைச்சர், செங்குட்டபாளையம் சீமான், சுப்ரமணியம் அவர்களே தஞ்சையில் நடந்த காங்கிரஸ் மாணவர் மாநாட்டில் கலந்துகொண்டு ஒப்பந்தத்தை குப்பைத் தொட்டிக்கு அனுப்பிவிட்டார். இதுபோன்ற சம்பவங்கள் எல்லாம் அரசியல் வேடதாரிகளின் உண்மைஉருவத்தை நாட்டுக்குக் காட்டிவிட்டது.

மாநாட்டைத் திறந்துவைத்த நண்பர் பி. எஸ். மணியம் அவர்கள் காங்கிரஸ் கட்சி மாணவர்களின் மீது வீசும் தந்திர வலையினைச் சுட்டிக் காட்டினர். சில சலுகைகள் கொடுப்பதினுல் மட்டும் மாணவர்களின் உள்ளங்களில் கொழுந்து விட்டெறியும் விடுதலை ஆர்வத்தை, நாட்டு பற்றை அழித்துவிட முடியாது என்று தனக்கே உரிய வகையில் அழுத்தம் திருத்தமாக விளக்கிக் கூறினர். இந்தியின் ஆதிக்கத்தின் பல்வேறு வடிவங்களையும் எடுத்துக்காட்டி, அதன் பேராபத்திலிருந்து நாம் மீளும் வகையினைக்கூறியது அவரின் திறப்புரைக்கே சிறப்பாக அமைந்திருந்தது.

தலைமை வகித்த தோழர் கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் "ஒவ்வொரு நாட்டு விடுதலை இயக்கமும் அரசியல் விடுதலையினைத்தான் முதன்மையாகக் கொண்டுகிளர்ச்சிகளை நடத்தி இருக்கின்றன. விடுதலைபெற்று அன்னியன் ஆதிக்கம் ஒழிந்த பின்புதான் பொருளாதாரப் பிரச்சனைகள் கவனத்திற்கு வருகின்றன. சில நாட்களுக்கு முன் பத்திரிக்கை நிருபர் ஒருவர், நாக நாட்டுத் தலைவர் டாக்டர் இன் கோன்கிலியா அவர்களை, "சுதந்திர நாகநாடு பொருளாதார நிறைவுடையது தானு" என்று கேட்டதற்கு, இதே கருத்தினைத் தான் அவரும் வலியுறுத்தியுள்ளார். வெள்ளையனை எதிர்த்து போராடிய இந்திய தேசிய காங்கிரஸ்அந்நிய ஆதிக்க ஒழிப்பைத் தான்முதன்மையாககொண்டிருந்ததேதவிர, பொருளாதாரப்பிரச்சனைகளை அல்ல. அதே வகையில்தான் நாகர்களும் அரசியல் அடிமைத்தனம் ஒழிந்தபிறகு, பொருளாதாரத் துறையில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்துவார்கள் என்று கூறியுள்ளார்.

நம்நாட்டிலும் நம்முடைய விடுதலைக் கோரிக்கையினைத் தவறு என்று எடுத்துக்காட்டி, வாதிட திறன் இல்லாவிட்டாலும், புதிய குழப்பங்களை உருவாக்குவதில் சிலர் முனைந்திருக்கிறார்கள், நவம்பர் 14ம் நாளன்று 'இந்து' இதழில் முன்னாள் விந்தியப் பிரதேசக் கவர்னர் திரு. சந்தானம் அவர்கள் ஒரு கட்டுரை தீட்டியுள்ளார். நாட்டு விடுதலைக்கான முயற்சி தற்கொலைக்கொப்பான காரியம் என்றும் டில்லி நம்மைச் சுரண்டவில்லை என்றும், பேதம் காட்டிப் பேசுவது நமது புனைந்துரை என்பனபோன்ற கருத்துக்களை அக்கட்டுரையில் அள்ளித் தெளித்துள்ளார். இவர்களைப் போன்ற அரசியல்சாகசசித்தர்களின் நேரத்திற்கொருபேச்சினுல் மட்டும் விடுதலை உணர்வு பட்டுவிடும் என்று நாம் நம்பவில்லை. தேசீய உணர்வை எதிர்த்தவர்கள் வாழ்ந்ததாக வரலாறுகாட்டவில்லை. தேசியம் நீறு பூத்த நெருப்புப்போல, இலை மறை காய் போல, நின்று நிலவிக் கொண்டேதான் உள்ளது. கருத்துக்குருடர்களுக்கு அதன் உண்மை ஒளி புலப்படவில்லையானுல் அதற்கு விடுதலை விரும்பிகள் பொறுப்பல்ல — அது கண்ணில் ஏற்பட்டுள்ள கோளாறின் விளைவாகும். இவர்களின் வெற்றுரை நமது முயற்சியிலிருந்து நிச்சயம் நம் கவனத்தை மாற்ருது. எண்ணித்துணிந்தவர்கள் நாம்! எனவே சபலத்திற்கு நமது சித்தத்தை கொடுத்துவிட மாட்டோம்.

ரோம் மக்கள் மன்றத்தில் நின்றுகொண்டு விடுதலைவீரன் மாஜினி, இத்தாலியின் எழுச்சிக் குரலை எழுப்பலானுன். "இத்தாலியின் வருங்காலத்திற்கான தலைப்பைத் தந்துவிட்டோம். அதன் அத்தியாயங்களை எழுத உங்களை அழைக்கிறோம். இத்தாலியமக்களே நம்பிக்கையோடு செயலாற்றுங்கள்" என்ருன் மாஜினி.

எழுச்சிமிக்க இத்தாலிக்கு மாஜினி தலைப்பினை நல்கியதுபோல, நமது தலைவர் அறிஞர் அண்ணு திராவிட விடுதலைப் போருக்கான தலைப்பை தந்திருக்கிருர்கள். அண்ணுஅவர்களை நாம் தலைவராகப் பெற்றிருப்பது, நமதுதலைமுறையினர் பெற்ற தனிப்பேறு. ஊழி காலமாக நின்று நிலவும் அடிமைத்தனம் அவரின் முயற்சியால், பணியால் தூள்தூளாக நொறுங்க இருக்கிறது. அவரின் ஆணையின்படி தாயகப் பணி ஆற்றுவோம்" என்று கூறி தலைமையுரையினை நிகழ்த்தினுர்.

தலைமையுரைக்குப் பின்னர் தோழர்கள் இராசகுமார்பீட்டர், எம். எஸ். வெங்கடாசலம, தங்கப்பாண்டியன், இ. கிருஷ்ணன், பி. பாலசுப்ரமணியம், மா. பாண்டியன், மலைச்சாமி. தி. அழகிரிசாமி, டி. கே. கோபலகிருஷ்ணன், டி. கே. பொன்னுவேலு, கோவை செழியன், ஆகியோர் இந்தி திணிப்பின் ஆபத்தைப் பற்றியும், மாணவர்களின் உரிமை பறிக்கப்படும் வகை பற்றியும், பல்வேறு தலைப்புக்களில் எண்ணங்களைக் கிளறும் வகையில் பேசினர். நிரந்து, இனிது சொன்ன வகையால் அச்சடித்த பதுமைபோல் இருந்து மாநாட்

(8–ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டினர் கருத்து விருந்தை செவி மடுத்தனர்.

பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன. அத்தனையும் முத்து அனைய முடிவுகள்.

எதிர்பாராத ஒரு சம்பவம் நடைபெற்றது — அது தான் மாணவ முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர். எஸ். டி, சோமசுந்திரம் அவர்களின் கருத்தாழமிக்க பேச்சு. கூடியிருந்தநண்பர்களை அவரின் சொற்பொழிவு வியப்பிலாழ்த்தியதற்க்குக் காரணம் உண்டு. அவரின் சூழ்நிலை நாவன்மையினை வளர்த்துக் கொள்ள இடம் 'கொடுக்கவில்லை'. அவர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலேயே சிறந்த 'விளையாட்டு வீரர்' என்ற பெருமையினை பெற்றிருந்ததால், பேச்சுதுறையில் அதிக அளவு கவனம் செலுத்தவில்லை. நிலைமைகள் நிர்ப்பந்தித்ததால் நா நலத்தையும் வளர்த்துக் கொண்டேன் என்று கூறுவதுபோன்று அமைந்திருந்தது அன்றைய அவரின் பேச்சு. அவரின் அறிவுரைகளும் கனிந்த பேச்சுகளும் நமது குடும்பத்தின் மூத்த அண்ணன் அறிஞர் அண்ணு அவர்களையே நினைவு படுத்திக் கொண்டிருந்தது.

“மாணவர் மாநாடு கூடிக் கலையும் கும்பாபிஷேகமல்ல. கும்பாபிஷேகம் முடிந்தவுடன் சிலை இருட்டறையில் தள்ளப் படும். இந்தச்சிலை பறவைகளின் அன்ருடக் கழிவுப்பொருள்களைத் தாங்கும் பொறுப்புடையதாகத் தாங்கி நிற்கும். மாணவர் மாநாடுஆயுதச் சாலையில் உள்ள ஆயுதங்களை உலைக் கூடங்களுக்கு கொண்டு வந்து துரு நீக்கப் பட்டு, வளை நீக்கப்படுவதைப் போல் மாணவர்கள் அச்சத்தை நீக்கி, அயர்வைப்போக்கி ஆற்றலை மேலும் பெருக்கிக் கொள்ளும் இடமாகும்.

அலகா பாத் பல் கலைக் கழகத்தினர் பட்டமளிப்பு விழாவிற்காக பாதுகாப்பு அமைச்சர் வி. கே. கிருஷ்ணமேனனை அழைத்திருக்கின்ருர்கள், ஆனல் அப் பல் கலைக் கழக மாணவர்கள் இந்தி தெரியாத மேனனை அழைக்கக் கூடாது என்றும், இந்தி தெரிந்த ஒருவரைதான் அழைக்க வேண்டுமென்றும் தீர்மானம் உருவாக்கி, பல் கலைக் கழக நிருவாகிகளுக்கும் தந்திருக்கிருர்கள். வடநாட்டு மாணவர்களைப்போல நமது தென்னக மாணவர்களும் மொழிப்பற்று மிக்கவர்களாய்த் திகழ வேண்டும்.” எனற அவர் சிந்திய கருத்துக்கள் இன்னும் நமது சிந்தையில் பசுமையாய் நின்று, கிளர்ச்சியினை உருவாக்கிக் கொண்டேயுள்ளது.

மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் கு. இந்திரசித் அவர்கள் ஆர்வக்குன்று. அவரின் முத்திரை மாநாட்டின் ஒவ்வொரு செயலிலும் பட்டு ஒளி வீசியது என்ருல் அது வெறும் புகழ்ச்சியுரை அல்ல — உண்மை நிலை. அவருக்கு உறுதுணையாகப் பணியாற்றிய மாநாட்டுச் செயலாளர்கள், வெற்றி வேந்தன், தமிழ்ச்செல்வன், கோ. சாமி, இராசேந்திரன், பொருளாளர் புகழ்மணி ஆகிய அனைவரும் உணர்ச்சிக் குவியல்கள், வெட்டி வா என்ருல் உடன் கட்டி வரும்தீரர்கள், திண்தோள் மறவர்கள், செயலாற்றும் செம்மல்கள், என்ருல் அந்த உரைகள் மிகையாகாது.

மதுரை திருநெல்வேலி இராமநாதபுரம், குமரிபோன்ற பல்வேறு மாவட்டங்களிலினின்றும் மாணவப் பிரதிநிதிகள் உற்சாகமாகக் கலந்துகொண்டு, உணர்ச்சியூட்டி உணர்ச்சி பெற்றுச் சென்றனர்.

1944-ம் ஆண்டு மதுரையில் மாணவர் மாநாடு நடைபெற்றிருந்திருக்கின்றது. திராவிட இயக்க வரலாற்றிலேயே மிக முக்கிய திருப்பக் கட்டத்தை உண்டாக்கிய 'சேலம்' மாநாடு நடந்த நேரம் அது. அரண்மனையிலிருந்து ஆல மரத்திற்கு கழகத்தை அறிஞர் அண்ணு அவர்கள் கொண்டுவந்த காலம் அது. பதினைந்து ஆண்டுகட்கு பின் மீண்டும் இப்போது தான வைகைக் கரையில் மீண்டும் மாணவர் மாநாடு கூடியது. அதற்கும் இம்மாநாட்டிற்கும் ஒரு வித்தியாசம். 1944-ம் ஆண்டு மாநாட்டில் பெரியார், அண்ணு, போன்ற பலரும் கலந்துகொண்டனர்.

“செவிக் குணவு இல்லாத போதுதான் சிறுது வயிற்றிற்கு ஈயப்படும்” என்ருன் வள்ளுவன். இடைவெளியில்லாமல் கூட மாநாடு காலைமுதல் இரவு வரை நடந்தது. வள்ளுவன் கூற்றை கூடியிருந்த மாணவர்படை மெய்ப்பித்தது.

பாண்டியன் தலைநகரில் கூடிய மாணவர்கள், இயக்கத்தை நிரப்பும் வெறும் சதைப்பிண்டங்கள் அல்ல — காலத்தின் தூதுவர்கள், புது [illegible]கத்தின் முன்ளேடிகள். மதுரை [illegible]ட்டு நிகழ்ச்சிகளும், பங்கேற்று செயலாற்றிய நண்பர்களின் காரியங்களும், அறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி நினைவுபடுத்தும் ‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும்’’ என்ற பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் எண்ணத்தைத் தான் நினைவுபடுத்தியது.

## மதுரை மாணவர் மாநாடு !

★

1. திறப்பாளர் பி. எஸ். மணியம், பி. ஏ. பேசிக்கொண்டுள்ளார். அமர்ந்திருப்போர் இ. கிருஷ்ணன், டி. கே. பொன்னுவேலு, கோவை செழியன், எம். எஸ். வெங்கடாசலம், எஸ். டி. சோமசுந்தரம்.
2. மாநாட்டில் ஒரு பகுதி. மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் எஸ். முத்து முதலியோர்.
3: தலைவர் தோழர் கே. ஏ. கிருஷ்ணசாமி,

# அமைதியின் அரண் ...!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன், பிரான்சுபோன்ற வல்லரசுகள் 1955-ம் ஆண்டு சூய[illegible]கால்வாய்பிரச்சனையை மையமாகக்கொண்டு எகிப்தில் ஆகரமிப்பைச் செய்தது. வல்லரசுகளின் கோபத்தை கூட எண்ணிப் பார்க்காமல் அமெரிக்க சர்க்கார் தலையிட்டது. மேற்கத்திய வல்லரசுகள்கூட இந்த நிலையை எதிர்பார்க்கவில்லை அமெரிக்க சர்க்கார் தங்களின் நடவடிக்கைகளுக்கு துணை நிற்கும் என்றே மனதாரக் கருதினர். நிலைமைகளோ வேறு விதத்தில் வடிவம்எடுத்தன. ஐசன்ஹோவரின் துணிந்த இந்தச் செயலினுல் பிரிட்டன் மக்களின் இதயத்தில் ஏற்பட்ட அதிர்ப்தியும் வருத்தமும் இன்னும் கூட மறையவில்லை.


உலக அரங்கில் யுத்தபீதி ஒழிந்து சமாதானம் நிரந்தரமாக வாழ வேண்டுமானல் அமெரிக்கா சோவிய ரஷியா ஆகிய இரண்டு வல்லரசுகளும், உடன்பட்டு ஒன்றிப் பணியாற்றினுல்தான் முடியும் என்பதை எவருக் மறுக்க முடியாது. எந்த ஒரு வல்லரசும் தன்னிச்சையாக நடந்து உலகத்தை தங்களின் ஆதிக்கப்பிடியில் கொண்டு வரலாம் என்றநிலைமை நிச்சயம்இன்று மாறிவிட்டது,

ஒருவரை ஒருவர் புரிந்துக் கொண்டு, அநுதாப உணர்வோடு பிரச்சனைகளை அணுகினுல்தான் ஒரு குறிப்பிட்ட முடிவிற்கு வரமுடியும் வீம்பு என்றும் நல்ல விளைவுகளை நல்கியதில்லை பொது வாழ்வின் பல கசப்பான அநுபவங்களும் இதனைத் தான் உலக மக்களுக்கு சதா நினைவூட்டிக் கொண்டேயுள்ளது

கடந்த இரண்டு ஆண்டுகளாக சோவியத் யூனியனின் கொள்கைகளைப் புரிந்து கொள்ள ஐசன்ஹோவர் பல வழிகளிலும் முயன்று வெற்றி பெற்றுள்ளார் சோவியத் யூனியனிடம் நட்புறவு கொள்வது பற்றி பல்வேறு கருத்துக்கள் அமெரிக்காவிலேயே நிலவுகின்றன மேற்க்கத்திய வல்லரசுகள் அவரின் இந்தப் போக்கினை விரும்பவில்லை மலைபோன்ற கண்டனக்கணைகளுக்கு மத்தியில் சமாதானத்தின் மீதுள்ள ஆழ்ந்த நம்பிக்கையினைக் கைவிடவில்லை அணுயுகம் இது மனிதகுலத்தில் நிரந்தர அமைதிநிலவ வேண்டுமானல் சமாதானத்தைத் தவிர வேறு மார்க்கமில்லை பரிகாரமில்லை அந்தப்புனித இலட்சியத்தை நிறைவேற்ற எந்தத் தியாகத்தைச் செய்யவும் தயங்கக் கூடாது என்று கருதியே பணியாற்றும் சமாதானத்தின் தூதுவராகச் செயலாற்றுகிருர்

கடந்த புதன்கிழமை ஐக்இந்தியத் துணைக் கண்டத்திற்கு வருகை செய்துள்ளார் இந்தியாவிற்கு வருகை தரும் முதல் அமெரிக்க ஜனதிபதி இவர தான் சீனஎல்லைத்தகராறு பற்றி அவரின கருத்துக்களை அறிய உலகு காத்திருக்கிறது சீன-இந்தியத் தகராறு பற்றிய எண்ணத்தை ஏற்க்கனவே கோடிட்டுக் காட்டியுள்ளார் போர் மூண்டு விடுமோ துயரம் தொடருமோ என்று சஞ்சலத்தில் ஆட்ப்பட்டிருந்த இந்திய மக்களுக்கு ஐசன் ஹோரின் வருகை ஒரு வகையில் ஆறுதல் அளிக்கலாம்,

— கிருஷ்ணசாமி,
பி. ஏ. (ஆனர்ஸ்)



அச்சிடுபவர் : கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும் : கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு. சென்னை-6.